# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி

## முதலேற்பு வழக்கு எண். 77/2007

1969ம் ஆண்டு 44வது பிரமாண சட்டத்தின் 4வது பிரிவின் கீழ் திருமதி. எம். ஆர்த்தி, எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : குபேரன்

த/பெயர்: ராமானுஜம்

நாள் : 16.08.2023

**பி.சா.1.**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

நாங்களும், வாதியும் எழுமேடு கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான் வழக்கு சொத்தானது எழுமேடு கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2,3 பிரதிவாதிகள் இறந்துவிட்டனர் என்றால் சரிதான். வாதி முதலில் எனது பெயரிலும், 2ம் பிரதிவாதி பெயரிலும்தான் இவ்வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் பிரதிவாதி 25.03.2011ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வாரிசுகளாக 3 முதல் 7 பிரதிவாதிகள் வழக்கில் சேர்க்கப்பட்டனர் என்றால் சரிதான். வாதி தரப்பு விசாரணை முடிவுற்று எனது தரப்பில் எனது பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தபிறகு 3ம் பிரதிவாதி கமலம் இறந்துவிட்டதாக எனது தரப்பில் தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான்.3ம் பிரதிவாதியின் வாரிசுகள் ஏற்கனவே இவ்வழக்கில் தரப்பினர்களாக உள்ளதால் இறந்தார் என மட்டும் 3 பிரதிவாதிகு அருகில் தாவா திருத்தம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

வாதியின் தந்தை பெயர் முத்துகிருஷ்ணன் என்றால் சரிதான். வாதி ராமானுஜத்தின் தாத்தா பெயர் வைத்தியலிங்க படையாட்சி என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கில் எதிர் வழக்குரை அதனுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்ட வம்சாவளி

பட்டியல் மற்றும் வரைபடம் **2**ம் பிரதிவாதியால் கையொப்பம் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான்தான் சொன்னேன்.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.